# நீங்கள் ஏராளமாக கேட்க வேண்டுமென்பது தான் அவருக்கு பிரியம். பெரிய காரியங்களுக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்

சகோ. பிரன்ஹாம்

**சிறிய காரியங்களைப் போலவே பெரிய காரியங்களையும் பெற்றுக்கொள்வது அவ்வளவு எளிதே. நீங்கள் வெறுமனே விசுவாசிக்க வேண்டும். அவ்வளவு தான்.**

சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: **பெந்தெகோஸ்தே எங்கே தோல்வியடைந்தது என்று நான் எண்ணுவது**, நவம்பர் 11, 1955

---

14. தேவன் ஒருபோதும்... ***தேவன் உங்களிடம் வைத்திருக்கிற அன்பையும் இரக்கத்தையும் உங்களால் ஒருபோதும் பயன்படுத்தித் தீர்க்கமுடியாது.*** **நீங்கள், "நல்லது, பிதாவே, உம்மை மிக அதிகமாக தொந்தரவு செய்வதை வெறுக்கிறேன்" என்று கூறலாம்.**

**அவ்விதமாக தொந்தரவு செய்யப்படவே அவர் விரும்புகிறார். அவர் அதை விரும்புகிறார். உங்களால் எப்பொழுதாவது தேவனிடம் மிக அதிகமாக கேட்க முடிந்தது என்று ஒருபோதும் எண்ணிவிடாதீர்கள். "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறபடியினால், உங்களுக்கு சித்திக்கிறதில்லை. நீங்கள் விசுவாசியாத காரணத்தினால், நீங்கள் கேட்பதில்லை" என்று வேதவாக்கியம் கூறுகிறது என்று நம்புகிறேன்.**

**நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி, நாம் விண்ணப்பம் பண்ணி, விசுவாசிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நீங்கள் ஏராளமாக கேட்க வேண்டுமென்பது தான் அவருக்கு பிரியம். பெரிய காரியங்களுக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்; ஏதோவொரு சிறிய கடுகு விதைக்கு உங்கள் விசுவாசத்தை மட்டுப்படுத்த வேண்டாம்** (don't limit). வேறு ஏதோவொரு விதமான விசுவாசத்தை நோக்கி இங்கே வெளியே தொடர்ந்து செல்லுங்கள், வெளியே பெரிய காரியங்களுக்குள் வாருங்கள். கேளுங்கள்... ***சிறிய காரியங்களைப் போலவே பெரிய காரியங்களையும் பெற்றுக்கொள்வது அவ்வளவு எளிதே. நீங்கள் வெறுமனே விசுவாசிக்க வேண்டும். அவ்வளவு தான்.*** **உங்களுக்கு விசுவாசம் உண்டு, அதை எவ்வாறு சரியாக பயன்படுத்துவது என்பதை அறிந்து கொள்ளுங்கள், அப்பொழுது அதெல்லாம் சரியாக இருக்கும்.** உங்களால் அதை சரியாக கிரியை செய்ய வைக்க முடியும், அப்போது அது அருமையாக இருக்கும்.

★★★★★